**செய்தி வெளியீடு எண் : 1819** **நாள் : 17.10.2022**

**<u>சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம் – கருத்தரங்கம் நடத்துதல்</u>**

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் விரைவாகவும், முழுமையாகவும் நடைபெறத் துணைபுரியும் வகையில் மாவட்டந்தோறும் உள்ள அனைத்துத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 2022–23ஆம் நிதியாண்டில் ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

சென்னை மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 18.10.2022, 19.10.2022 ஆகிய இரண்டு நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 வரை சென்னைப் பல்கலைக்கழக பவளவிழாக் கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. இப்பயிலரங்கில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர், தமிழறிஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர். இப்பயிலரங்கு–கருத்தரங்கில் துறைத் தலைமை மற்றும் சார்நிலை அலுவலகத்திலிருந்து அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் என மொத்தம் 5 பேர் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in